கலைக்கதிர் நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 10 புதன்கிழமை [25-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 29

# கொக்குத்தொடுவாயில் திடீர் தாக்கு!

# 25க்கும் அதிகமான படையினர் பலி!!

## பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், டிசம்பர் 25

மணலாறுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் இரண்டு படையணிகள் (பிளட்டூன்கள்) மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் இருபத்தைந்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர், பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இந்தச் சமரில் இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் ரோந்து சென்ற இரண்டு பிளட்டூன்களைச் சேர்ந்த சுமார் ஐம்பது படையினர் மீதே நேற்றுக் காலை 8-45 மணியளவில் விடுதலைப் புலிகளின் பெரும் அணி ஒன்று சுமார் பத்துநிமிட நேர அதிரடித் தாக்குதலை நடத்தியது.

அண்மைக் காலத்தில் ஸ்ரீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய

(3 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ மீட்பு நிதி செலுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 25

சமிகரனை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்தவர்களும், கரவெட்டி நகர்வட்டப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வதிவோரும் நாளை மீட்பு நிதி செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் —

பிற்பகல் ஒருமணி முதல் பிற்பகல் 2-30 மணி வரை வட்டு இந்துக் கல்லூரியிலும் —

பிற்பகல் 3 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை சரவணை சரஸ்வதி ம.வித்தியாலயத்திலும் மீட்பு நிதி செலுத்தலாம். (உ)

### முச்சந்தி முரளி



அப்ப... கிறிஸ்து பிறந்த நாளிலை ஒரு வல்லரசு அஸ்தமிக்குது பிறகென்ன...!

## வெளிநாட்டுத் தபால்கள் இன்று விநியோகம் நடக்கும்

யாழ். நகரப் பகுதியில் இன்று வெளிநாட்டுத் தபால்கள் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

'லின்லி' கப்பலில் வந்து சேர்ந்த தபால்களில் கொழும்பு போன்ற வெளியூர் தபால்கள் மட்டும் நேற்று விநியோகிக்கப்பட்டன.

இன்று விடுமுறை நாளாக இருந்தபோதும், தபால் விநியோகம் நடைபெறும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வெளியிடங்களுக்கான தபால்கள், நேற்று யாழ். நகரிலிருந்து அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பப்பட்டன. (ஒ-8)

### சூழல் சுகாதார வாரம்:

## இரண்டாம் நாள் பணிகள் சுறுசுறுப்புடன் நடந்தன

சூழல் சுகாதார வாரத்தின் இரண்டாம் நாளான நேற்று யாழ். நகரப் பகுதியையும், கோட்டைப் பகுதியையும் சுத்திகரிக்கும் வேலைகள் மிகவும் சுறுசுறுப்புடன் நடைபெற்றன.

இத்துடன் மாநகரசபை எல்லைக்குள் வட்டார ரீதியாக அமைக்கப்பட்ட குழுக்கள், அந்தந்த வட்டாரப் பகுதிகளில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டன.

கோட்டை மற்றும் யாழ். நகரப் பகுதிகளில் உள்ள குப்பை கூழங்கள் கட்டிட இடிபாடுகள் போன்றவற்றை அகற்றும் பணிகளில் தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் மற்றும் சமூகநல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். (ஒ-3-15)

## வங்காலையில் தமிழர்கள் பெருமளவில் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், டிச. 25

மன்னார், வங்காலைப் பகுதியில் இருந்து சுமார் 750 தமிழ்க் குடும்பங்கள் வரையில் இடம்பெயர்ந்து சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடக்குமுறை மற்றும் அடாவடித்தனங்கள் காரணமாகவே இந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த இந்த மக்கள் கஜேந்திர தேவி நிற்கும் வசதியற்ற இடங்களிலேயே தங்கி...

### கொக்குத்தொடுவாய்க்கு மேலதிக துருப்புகள்

கொழும்பு, டிச. 25

கொக்குத்தொடுவாயில் மோதல் நடைபெற்ற இடத்தில் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மூலம் மேலதிக படையினர் அனுப்பப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடந்த இடத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் உள்ள இராணுவ முகாமில் இருந்தும் சம்பவம் நடந்த இடத்துக்கு படையினர் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

### வானத் தாக்குதல்

கொழும்பு, டிச. 25

கொக்குத்தொடுவாயில் அதிரடித் தாக்குதல் நடைபெற்ற பகுதியில் கடும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களும், ஹெலித் தாக்குதல்களும் இடம்பெற்று வருவதாகவும்—

அப்பகுதியில், மோதல்கள் தொடர்வதாகவும் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

இதேசமயம் —

குண்டு வீச்சினால் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்பட்டதா என்பது குறித்து நேற்றிரவு வரை தெரியவரவில்லை.

### யுத்த நிறுத்தம் குழம்பியது!

கிறிஸ்மஸ் தினத்தை ஒட்டி யுத்த நிறுத்தம் ஏற்படவிருந்த வாய்ப்பு, கொக்குத்தொடுவாய்த் தாக்குதலை அடுத்து குழம்பிப்போய்விட்டது.

ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் இவ்வாறு தெரிவித்தார் என்று அறிவிக்கப்பட்டது. (க-எ)

### நத்தார் வாழ்த்து

வாசக நேயர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
செய்தியாளர்கள்,
எழுத்தாளர்கள்,
ஆதரவாளர்கள்,
அபிமானிகள்
அனைவருக்கும்
உதயனின்
நத்தார் வாழ்த்துக்கள்
உரியனவாகுக.

## வெவ்வேறு 4 சம்பவங்களில் 8 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 25

ஈவினைப் பகுதியில் நேற்று தற்செயலாக நடந்த வெடிவிபத்துச் சம்பவம் ஒன்றில் 3 வேங்கைகளும், அச்சுவேலியில் நேற்று இடம்பெற்ற ஷெல் வீச்சில் மற்றொரு வேங்கையும், நேற்று முன்தினம் வவுனியாப் பகுதியில் நடந்த மோதலில் இன்னொரு போராளியும் வீரமரணம் அடைந்தனர்.

அதேசமயம் கடந்த 20 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் நடந்த ஒரு விபத்திலும் 3 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

ஈவினையில் நடந்த வெடிவிபத்தில் கப்டன் வாணன் [சண்முகலிங்கம் மோகனகுமார்-உரும்பிராய் கிழக்கு], லெப்டினன்ட் சீராளன் [ரஞ்சன் முருகேஸ்வரன் வரதன் - காரைநகர்], வீரவேங்கை இளம்பரிதி [ராஜ் - கைலாயநாதன் சிவகணேசன் - கொட்டடி] ஆகியோரும்—

அச்சுவேலியில் வீரவேங்கை சந்துரு [செல்லையா சுகுமார் - ஈச்சமோட்டை] என்பவரும்—

வவுனியாவில் லெப்டினன்ட் ஹிட்லர் [துஷ்யந்தன் - இராசதுரை கிறிஸ்ஜயகுமார் - வவுனியா] என்ற வீரவேங்கையும்—

திருகோணமலையில் இராணுவத்தினிடம் இருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ஷெல் ஒன்றைகழற்றியபோது அது வெடித்ததில் கப்டன் கிருபாணி (துரைராஜா சிவராஜ்குமார்-திருமலை), லெப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### செஞ்சிலுவை அதிகாரிகள்

## தீவுப்பகுதி விஜயம் குறித்து பலாலியில் வெள்ளி ஆராய்வு

தீவுப் பகுதிகளில் இக்கட்டான மக்களின் நிலைமை குறித்து அப்பகுதிகளுக்கு நேரில் சென்று அறிந்து கொள்வதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.

நாளை மறுதினம் பலாலி முகாமில் படை அதிகாரிகளுடன் இது தொடர்பாக, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பேச்சு நடத்த உள்ளனர்.

இதே வேளை—

காங்கேசன்துறை துறைமுக உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை, குடாநாட்டுக்கு வாகன அணி மூலம் எடுத்து வருவது தொடர்பாக அன்று முக்கிய பேச்சுக்கள் இடம் பெறும் என்றும் தெரிய வருகிறது.

அனேகமாக இந்த விடயத்துக்கு அன்றைய தினம் சாதகமான முடிவு ஒன்று கிடைக்கும் சாத்தியம் உள்ளதாக நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

## கோர்பச்சேவ் இன்று ராஜினாமா!

### தொலைக்காட்சியில் தோன்றுவார்

லண்டன், டிச. 25

கலைக்கப்படும் சோவியத் யூனியனின் கடைசி ஜனாதிபதியான மிக்கெயில் கோர்பச்சேவ் தமது பதவியை இன்று இராஜினாமாச் செய்வார்.

கிறிஸ்மஸ் தினத்தன்று — இன்று மாலை — அவர் தொலைக்காட்சியில் தமது பதவி விலகல் பற்றிய அறிவிப்பை வெளியிடுவார் என்று மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

கோர்பச்சேவின் பதவி விலகல் பற்றிய அறிவிப்பின் வாசகம் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சினிடம் காட்டப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

கலைக்கப்படும் சோவியத்தின் உயர் சபையான "சுப்ரீம் சோவியத்" நேற்றுக் கூடியது என்றும் —

எனினும் முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலையில் அது ஒத்தி வைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமக்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து வைக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாடுகளிலும் தொடர்பு கொள்ளலாம். அவுஸ்திரேலியாவில் வேலை செய்யும் செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு பெண் தேவை. துர்க்கா திருமண சேவை, வசந்த மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (4427)

### இலவச திருமண சேவை

34 வயது B. A Diploma மகம் 2, ஆசிரியைக்கு தகுந்த மணமகன் தேவை. குறிப்பு கள் உண்டு. விரும்புபவர் கள் ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, 958/8, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (4453)

### மணமகன் தேவை

இந்து உயர்குல பட்டதாரி ஆசிரியைக்கு (வயது 34) பொறியியலாளர், கணக்காளர் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: எஸ். பரமேஸ்வரி, 122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (19160)

**N. C. A.**
ஆத்தியடி,
பருத்தித்துறை.
**1st in Com.**
கணக்கியல்
**திரு. S. K.**
25-12-1991 புதன் 9 மணிக்கு நேர அட்டவணை பெறவும்.
(சி/1220)

### கலண்டர் நாட்குறிப்பு

ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1992 இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளின்படி எல்லா விடயங்களும் அடங்கியது: விலை ரூபா 36/- ஆனந்தா நாட்குறிப்பு பெரிய அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு பக்கம். ரூபா 80/-. இப்பொழுது விற்பனையாகிறது: எங்கும் கிடைக்கும். வெளியீடு: ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி/1224)

**N. C. A.**
ஆத்தியடி,
பருத்தித்துறை.
**A/L 93**
**கலை, வர்த்தக**
வகுப்புகள்
ஆரம்பமாகியுள்ளன.
(சி/1221)

### பழைய புத்தகங்கள்

புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் நியாய விலையில் கொள்முதல் செய்ய நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது யாழ். பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி. (19175)


## சாரதாதேவி ஜயந்தி தினம்

யாழ்ப்பாணம், டிச. 25

தாய் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 139 ஆவது ஜயந்தி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி ராமகிருஷ்ண மையத்தில் நடைபெறும். (இ)


## அறிவித்தல்

### கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபை

04 - 08 - 1991 இல் நடந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி ''கொக்குவில் மயான உரிமையாளர் சங்கம்'' என்ற பெயர் ''கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபை'' என மாற்றப்பட்டுள்ளது என சகலருக்கும் அறியத் தருகிறோம்.

ம. மாணிக்கவாசகர்,
தலைவர்.

(19168)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

## அமரத்துவம் எய்திய அதிபர்கள் நினைவு தினம்

மேற்படி சங்கம் எதிர்வரும் 27 - 12 - 1991 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து பழைய மாணவர் தினத்தையும் அன்று பி. ப. 3.00 மணியில் இருந்து கல்லூரியின் காலஞ்சென்ற அதிபர்களது நினைவுப் பேருரைகளையும் நடாத்த எண்ணியுள்ளது.

அன்று நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த. முத்துக்குமாரசாமி,
ப. மா. ச. தலைவரும்,
கல்லூரி அதிபரும்.

பொ. விக்னேஸ்வரலிங்கம்,
செயலாளர் ப. மா. சங்கம்.

(19166)


# இலங்கை கண்தான சங்கம் ஏற்படுத்திய உலக சாதனை

வெளிநாடுகளுக்கு கூடுதல் கண்களை வழங்கியது மூலம் இலங்கை கண்தான சங்கம் உலக சாதனை ஒன்றை நிலை நாட்டி உள்ளது.

1964 ஆம் ஆண்டு முதல் தடவையாக சிங்கப்பூருக்கு கண்ணை வழங்கிய இலங்கை கண்தான சங்கம் இதுவரை 60 நாடுகளுக்கு 30 ஆயிரம் கண்களை வழங்கி உள்ளது.

இலங்கை கண்தான சங்கத்தின் சேவையைக் கௌரவிக்கு முகமாக உலக நாடுகள் 60 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களையும், 80 லட்சம்ரூபா பெறுமதியான மற்றும் உதவிகளையும் வழங்கி உள்ளன. (இ-த)

## நத்தார் தினத்தையொட்டி 1,000 கைதிகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, டிச. 25

நத்தார் தினத்தை முன்னிட்டு ஆயிரம் சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட உள்ளது.

நீதி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்தின் பரிந்துரைக்கு இணங்க ஜனாதிபதி இது தொடர்பான உத்தரவை விடுத்துள்ளார்.

மன்னிப்பு வழங்கப்படுபவர்களில் பெரும்பாலானோர், தண்டப்பணம் செலுத்தாததுக்காகச் சிறைத் தண்டனை பெற்ற குற்றவாளிகள் ஆவர். இந்த மன்னிப்புத் திட்டத்தின் கீழ் சிலரின் மரண தண்டனையும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது. (த-எ)

## கடவுச் சீட்டு பெறுவதில் சிக்கல்

நவாலி, டிச. 25

கடவுச் சீட்டுப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் வடபகுதியைச் சேர்ந்த பலர் தற்போது புதிய சிக்கலை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் நிறுவனங்களினால் உறை போடப்பட்டு வழங்கப்படும் கிழிந்த அல்லது பழுதடைந்த அடையாள அட்டைகள் கடவுச் சீட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் போது, அவை பரிசீலனைக்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால், ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

இதன் காரணமாக கடவுச் சீட்டுப் பெறச் செல்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-100)

### தமிழில் சமூகவியல் பாடம்

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ். பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பாடம் முதன் முறையாக தற்போது தமிழில் போதிக்கப்பட்டு வருகிறது.

இப்பாடத்தை தமிழ் மொழியில் போதிக்க கடந்த 30 வருடங்களாக எடுக்கப்பட்டு வந்த முயற்சி இப்போதே கைகூடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-அ)


## புதிய தாரகை புடைவை மாளிகை

வழங்கும்

## மாபெரும் மலிவு விற்பனை

உங்கள் தேவைக்கிணங்க
எங்கள் சேவை மீண்டும் நீடித்துள்ளது.

நீடிக்கும் திகதி: 29 — 12 — 1991 வரை
மாபெரும் மலிவு விற்பனை

ஆடவர்களுக்கான-
ரெடிமேட் ஷேர்டிங், சூட்டிங் ஆடைகளையும்
சிறுவர்களுக்கான-
ரெடிமேட் ஆடைகளையும்,
நவநாகரிக மங்கையர்களுக்கான சகல விதமான-
ரெடிமேட் ஆடைகளையும்

ஒரே முறையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

புதிய தாரகை புடைவை மாளிகை,
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

[19176]

புனித பத்திரிசியார் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த ஒன்றுகூடலும், ஒளி விழாவும்

1991 டிசம்பர் 28 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

குருத்துவ வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடும் யாழ் மறைமாவட்ட ஆயர் அவர்களும், வெள்ளி விழாவைக் கொண்டாடும் பழைய மாணவர் குருக்கள் தந்தையர்களும் விசேட அதிதிகளாக கலந்து கொள்வார்கள்.

பழைய மாணவர்கள் குடும்பத்துடன் இவ்விழாவில் பங்குபற்றுவதை உறுதி செய்யும் முகமாக தமது பெயர்களை சங்க அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜி. ஆர். இராசசிங்கம்,
கௌரவ பொதுச் செயலாளர்.

59, புனித பத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.
23-12-1991

(சி/1225)


# சிறப்புப் புலனாய்வுக் குழு: நடவடிக்கைகள் ஆரம்பம்

பேரறிவாளன் மற்றும் அவர்களின் கூட்டாளிகள் தொடர்பான வழக்குகள் பற்றிய புலனாய்வு நடவடிக்கைகளை, காவல்துறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ் நாடு சிறப்புப் புலனாய்வுக் குழு ஆரம்பித்துள்ளதாக தமிழக மாநில சட்டம்-ஒழுங்கு அமுல் பிரிவின் தலைமைக் காவல் ஆய்வாளர் திரு. வோல்டர் தேவாரம் சென்னையில் தெரிவித்தார்.

தமிழக வடமேற்கு மாவட்டங்களில் தமிழ் போராளிகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்கென மேற்கொள்ளப்பட்டிருக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளை காவல்துறையினர் தொடர்ந்து உன்னிப்பாக எடுத்து வருவதால் மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (த)

## மட்டக்களப்புக்கு புதிய அரச அதிபர்

கொழும்பு, டிச. 25

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக திரு. ஆர். கோணகுருசாமி நியமிக்கப்பட்டுள்ளார். (உ-எ)

# கோர்பச்சேவின் சேவையை உலகம் பயன்படுத்தவேண்டும்

### லண்டன் நாளிதழ்கள் கருத்து

லண்டன், டிச. 25

திரு. மிக்கெய்ல் கோர்ப்பச்சேவின் சேவையை ஐ. நா. போன்ற உலக அமைப்புகள் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

இப்படி லண்டன் நாளிதழ்கள் நேற்று கருத்து வெளியிட்டன.

முன்னாள் சோவியத் குடியரசுகள் பதினொன்று கூட்டாக அமைத்துள்ள பொதுநலவாய அமைப்பில் திரு. கோர்பச்சேவுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை என்றாலும் அவரை உலக அரங்கில் இருந்து மறைந்து போக அனுமதிக்க முடியாது என்றும் லண்டன் பத்திரிகைகள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளன.

கோர்பச்சேவின் அறிவு, தீர்க்கதரிசனம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ள ஐ. நா. போன்ற சர்வதேச அமைப்புகள் முன்வர வேண்டும் என்றும் லண்டன் பத்திரிகைகள் கோரியுள்ளன.

இதற்கிடையில், கோர்பச்சேவுக்கு பேராசிரியர் பதவி வழங்கி சில அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் முன்வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

# ரஷ்யாவுக்கு வல்லரசு அந்தஸ்து: அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

முன்னாள் சோவியத் யூனியனுக்கு வழங்கப்பட்ட வல்லரசு அந்தஸ்தை ரஷ்யாவுக்கு வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தீர்மானித்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கு தொடர்பாக தற்போது இடம்பெற்று வரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்து நடத்தும் கூட்டமைப்பு நாடுகளில் ஒன்றாக ரஷ்யாவை சேர்த்துக்கொள்ளவும் ஜனாதிபதி புஷ் முன்வந்திருக்கிறார்.

இதுவரை மத்திய கிழக்கு அமைதி மாநாட்டை அமெரிக்காவும், சோவியத் யூனியனுமே கூட்டாக நடத்தி வந்தன. சோவியத்யூனியன் இரண்டு பேச்சுவார்த்தைத் தொடர்ந்து வந்த நாட்டின் இடம் ரஷ்யாவுக்கு வழங்கப்படுகிறது.

இதன் காரணமாக அமெரிக்கா சோவியத்யூனியனுடன் இதுவரை காலமும் செய்து கொண்ட ஆயுத உடன்படிக்கைகள் யாவும் தற்போது ரஷ்யாவைக் கட்டுப்படுத்துவதாக அமையும் என்று வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சோவியத்யூனியன் முன்னர் வகித்து வந்த நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்தும் ரஷ்யாவுக்கு வழங்கப்படுகிறது.

இதனிடையில் — சோவியத் யூனியன் வகித்த இடத்தை ரஷ்யா பெற்று விட்டதை அங்கீகரிப்பதாக ஐரோப்பிய பொருளாதார சமூகமும் அறிவித்திருக்கிறது. (இ-எ)

# தீவிரவாதிகள் பிரச்சினை: ராவ் - ஜெயலலிதா பேச்சு

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தீவிரவாதிகள் பிரச்சினை மற்றும் காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை ஆகியவை குறித்து விவாதித்தார்.

தேசிய வளர்ச்சிச் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக புதுடில்லி சென்ற சமயம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

முதல் நாள் கூட்டத்தில் மட்டும் கலந்து கொண்டு விட்டு அவர் திங்கட்கிழமை தமிழ்நாடு திரும்பினார்.

முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் நினைவு தின வைபவங்களில் கலந்து கொள்ளவே, அவர் கூட்டத்தில் முழுமையாகக் கலந்து கொள்ளாது சென்னை திரும்பி வந்தார்.

எம். ஜி. இராமச்சந்திரனின் நினைவு தினம் நேற்று தமிழ்நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜெயலலிதா தலைமையின் அ. தி. மு. க. தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்று எம். ஜி. ஆர். சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தினர். (இ-எ)

## இரணைமடு குள நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, டிச. 25

கிளிநொச்சியில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தாழ்ந்த பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. (இ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இயேசு காட்டிய வழியில்....

இன்று இயேசு பெருமானின் பிறந்த நாள். உலகு எங்கணும் வாழும் கிறிஸ்தவப் பெருமக்கள் மனச்சிரத்தையுடன் கொண்டாடும் கிறிஸ்தோயத் திருநாள்.

இயேசு அடக்கப்பட்டோருக்காக, ஒடுக்கப்பட்டோருக்காகக் குரல் கொடுத்தவர். மக்கள் எல்லோரும் ஏற்றத் தாழ்வின்றி சமாதானமாகவும், சமத்துவமாகவும், சகோதரர்களாகவும் வாழ வேண்டும் என்ற இலட்சியமுடையவர். அன்பு, கருணை, மானுடம் ஆகிய மூன்று தத்துவங்களை அவரது போதனைகளும், வாழ்க்கையும் எடுத்தியம்புகின்றன.

அடுத்த மனிதனில் மறைந்திருக்கும் தெய்வத்தைக் கண்டவர் இயேசு பிரான். அதனால் மனிதனுக்குச் சேவை செய்வதில் இன்பம் கண்டவர். அடுத்தவர்களின் துன்ப துயரங்களை நீக்குவதையும், அடக்கப்பட்டோருக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பதையும், தெய்வத்துக்குச் செய்யும் தொண்டுகளுக்குச் சமமாகக் கருதியவர்.

ஈழத் தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் இயேசுவை முற்றாக இல்லாவிடினும் ஓரளவேனும் அறிந்தவர்கள் நிறையத் தேவைப்படுகிறார்கள். அவரின் போதனைகளை நன்கு உணர்ந்தவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

ஈழத் தமிழ் இனம் விடுதலைக்காகப் போராடி வருகிறது. அது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. தமிழருக்கு விடுதலை கிடைக்காமைக்கு சிங்கள அரசாங்கமும், சிங்களத் தலைவர்களும் மட்டுமே காரணம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களைவிட தமிழர்களுக்குள்ளேயே மறைந்திருக்கும் எதிரியைப் பலரும் காண்பதில்லை; உணர்வதும் இல்லை.

எமது மக்கள் ஒவ்வொருவரிடமும் நிறைந்திருக்கும் பல பாவங்களே எங்கள் விடுதலைக்குப் பிரதான எதிரிகள். அவற்றில் முதன்மையானது சுயநலம். தமிழர்கள் தம்மைச் சூழ்ந்த அந்தகாரத்தின் மத்தியில், இலேசான ஒளிக்கீற்றையேனும் காண முடியாமல் சஞ்சலப்படுவதற்கு எமது சுயநலமே காரணம்! எவ்வாறு?

இங்கே கஷ்டம் உண்டு எனபதற்காகப் பலரும் வெளிநாடுகளுக்கு ஓடுகிறார்கள்; குடும்பம் குடும்பமாக ஓடுகிறார்கள். அவர்கள் சுத்தச் சுயநலவாதிகள்.

அவ்வாறு வெளியே ஓடாமல் எஞ்சியிருப்போரில் எத்தனையோ பேர் ஊனமுற்றவர்களாக மாறிவிட்டார்கள். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் உணவு, உடை, உறையுள் இல்லாமல் இடம்பெயர்ந்தவர்களாகி, அகதி முகாம்களில் அல்லலுறுகிறார்கள்!

இவர்களை எங்கள் சகோதரர்களாக இனங்காண்பதற்கு, இடம்பெயராதவர்கள், வசதி படைத்தவர்கள் பின்னிற்கிறார்கள்; மிகப் பலர் மறக்கிறார்கள். தன்னிடம் உள்ளதைப் பிறருக்கு பங்கிடும் மனச்சுத்தம், துணிவு இன்னும் எம்மில் பெரும்பாலனோருக்கு வரவில்லை.

இவற்றுக்குக் காரணம் எமது மத்தியில் மண்டிப்போன சுயநலக் கலாசாரமே! அதனைத் தகர்த்து எறிந்து இயேசு காட்டிய வழியில் பிறர்மீது கருணை காட்டும், அன்பு செலுத்தும் கலாசாரம் வளர்வதற்கு இந்தக் கிறிஸ்தோயத் திருநாளில் அத்திவாரமிடுவது [illegible] தாகும்.

# எம்மைத் தூய்மைப்படுத்தும் பயணத்தின் இலக்கு இறைவன்

> இன்று நத்தார் திருநாளாகும். அதனையொட்டி இந்தச் சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

அமைதிக்காக ஏங்குகின்றன எம் நெஞ்சங்கள்; பசியும் பட்டினியும் ஒருபுறம். போரும் பலாத்காரமும் மறுபுறம். அடிப்படைத் தேவைகளுக்குக் கூட மதிப்பில்லாமல் அந்தரிக்கும் வேளையிலும் உடன் பிறப்புகளே ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்தும், மறுதலித்தும் பழிதீர்த்தும் சுருங்கக் கூறின் அழிந்துகொண்டும் இருக்கிறார்கள்.

துன்பங்கள் மலைபோல எழும் வேளை மனங்கள் சோர்வு கொண்டு விரக்தியில் கசந்து போகின்றன. சிலர் துன்பச் சுமைகளால் சாய்ந்து நலிந்து நடைபிணங்களாகிவிட்டனர். ஐயோ! இதுவும் ஒரு வாழ்க்கையா! என்று கூறி சலிப்படைவதால் அமைதிக்கான ஏக்கம் கூடக் காணல் நீராகிவிட்டது. மனங்கள் சோகக் கதைகளால் நிறைந்து எங்கும் முகாரி இராகங்களே எதிரொலிக்கின்றன.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்கிறார் வள்ளுவன். நோய் தீர்ப்பதானால் அதன் காரணத்தையும் கண்டறிந்து பொருத்தமான சிகிச்சையை பழங்கும்போதுதான் ஆரோக்கிய வாழ்வு பிறக்கிறது. ஏன் இந்த அமைதியின்மை. ஏன் இந்த அல்லல்கள். தாகம் எடுக்கின்றது என்றால் சாக்கடையில் நீர் பருகி தாகம் தீர்க்க முடியாது.

உண்மையில், அமைதிக்கு வழி உண்டு. அதை அறிந்தும் அறிந்தும் ஒருவராவது தெரிந்தும் ஏற்க மனமில்லாதவராகவும் இருப்பது தான் எமது துர்-அதிர்ஷ்டமாகும்.

"உலகில் இறைவன் தயவு பெற்றவருக்கு அமைதி உண்டாகுக" என்று கிறிஸ்து பிறப்பின்போது வானவர் கீதம் பாடினர். அமைதி இறைவன் தரும் உன்னத கொடையாகும். அமைதிக்கும் ஊற்றும் உறைவிடமும் இறைவன். ஆனால் மனிதன் இறைவனை நாடு கடத்திவிட்டு அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவது 'உமியைக் குத்தி அரிசி எடுப்பது போல' ஆகிவிடும்.

தெய்வம் தவறு செய்யும் போதுதான் மனிதன் அமைதி காண முடியும். இறைவனது இரக்கம் மாரிமழைபோல பொழியப்பட்டாலும் மனிதன் தன் மனத்தை கருங்கல்லாக்கிக் கொண்டு, பொய்யும் புரட்டும், கொலையும் களவும், காமமும் பழியும் மனதில் குடிகொண்ட போது இறைவன் நாடு கடத்தப்பட்டது உண்மைதான்.

கிறிஸ்து பிறக்கும்போது குடிசையின் சொந்த ஊரில் ஒரு சத்திரத்தில் கூட அவர்களுக்கு இடமில்லாமல் போய்விட்டது.

இது இறைவன் மட்டில் மனிதனது அசட்டையீனத்தையே பிரதிபலிக்கிறது. உன்னிடமும் அமைதி இல்லையானால், உன் சமுதாயத்திலும் அமைதி இராது என்பது திருத்தந்தை 23ஆம் அருளப்பரது கூற்று. நெஞ்சத்தின் நிம்மதியைக் குலைப்பது பாவமும், பாவப் பழக்கமுமாகும். "தூய மனத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" என்பது இயேசுவின் மலைப்பொழிவின் அமுதவாக்கு. ஒருவன் கடவுளைக் காண்பதும் தேடுவதும் தன் மனதை கள்ளம் கபடத்திலிருந்தும் அகங்காரம் ஆணவத்திலிருந்தும் தூய்மைப்படுத்த முயற்சிப்பதும், இரண்டும் ஒரே பயணம் தான்.

எம்மைத் தூய்மைப்படுத்தும் பயணத்தின் இலக்கும் இறைவன் தான். எப்போது இறைவனை நாம் உண்மையாகத் தேட ஆரம்

**சுவாமி ஜீவா போல்**
**அ. ம. தி**

பிக்கின்றோமோ; எப்போது இறை உணர்வில் நாம் சிந்திக்க, பேச, உறவாட விழைகின்றோமோ அன்று தான் எமக்கு அமைதியின் ஆதவன் கருமேகங்கள் மத்தியில் உதயமாவதைக் காண்போம். அன்றிலிருந்து எம் வாழ்வில் அமைதியின் வசந்தம் துளிர்க்கத் தொடங்கும்.

(இ)

## "மகிழ் நத்தார்" நிகழ்ச்சி

நத்தார் தினமான இன்று கிறிஸ்தவ கலை இலக்கிய இணையம் "மகிழ் நத்தார்" நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

நவாலி "கலைவண்ணம்" இல்லத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் அருட்தந்தை லூயிஸ் போசப் தலைமை விருந்தினராகவும், யாழ். புனித மரியாள் வித்தியாலய அதிபர் திரு. சிவராயர் தார்சிசியஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கவிஞர் இளங்கம்ப பாரதி தலைமையில் "மொட்டும் ஒன்றே கோயிலானது" என்ற தலைப்பில் கவியரங்கு இடம்பெறும் இளம் கவிஞர்கள் க. சத்தியசீலன், ஸ்ரீ[illegible]ன், குவராஜ், தவராஜா ஆகியோர் பங்குபற்றுவர்.

இந்நிகழ்ச்சியின் போது "மகிழ் நத்தார்" என்ற வாழ்த்துப்பா மடலை இணையத் தலைவர் மதுரகவி ஜெயம் வெளியிட்டு வைப்பார்.

(அ)

## கல்விச் சுற்றுலா நாளை ஆரம்பம்

இவ்வாண்டுக்குரிய அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டியில் கோட்டம், மாவட்ட மட்டத்தில் முதலாவது இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா நாளை ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்குபற்றுவோர்களை பின்வரும் இடங்களில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது:-

வலிகாமம் — காலை 9 மணி — குளப்பிட்டிச் சந்தியில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க தலைமையகம்.

வடமராட்சி — காலை 9 மணி - நெல்லியடி மகாவித்தியாலயம்.

தென்மராட்சி — காலை 10 மணி — தென்மராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க செயலகம்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாணவர்கள் — காலை 9 மணி— கிளிநொச்சி மாணவர் இயக்கச் செயலகம்.

## துணை அமைச்சரின் மகன் லலித் கட்சியில் சேர்ந்தார்

தென்பகுதியில் உள்ள துணை அமைச்சர் ஒருவரின் புதல்வன் லலித் — காமினி ஆகியோரின் கட்சியான — புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் சேர்ந்துள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஐ. தே. கட்சியின் முன்னாள் எம். பியான சுனில் ரஞ்சன் ஜெயகொடி, மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஐ. தே. கட்சியின் முன்னாள் எம். பி. ஒருவரின் புதல்வர் ஆகியோரும் புதிய [illegible] என்றும் [illegible] துள்ளது.

(ஏ)

# நத்தார் கலகலப்பு; நகரில் சனக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 25

நத்தார் தினத்தையொட்டி நேற்று யாழ். நகரப் பகுதி கலகலப்பாகக் காணப்பட்டது.

வீதியோரங்களிலும் மற்றும் கடைகளிலும் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்றது. இரவு சுமார் 7 மணி வரையிலும் சில கடைகள் திறந்திருந்தன.

பொருள்களை வாங்குவதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தனர். புடவைக் கடைகளிலும் சனக் கூட்டம் காணப்பட்டது.

இதேவேளை நேற்றிரவு நகரப் பகுதியில் மக்கள் சாரிசாரியாக தேவாலயங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர். கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட நத்தார் ஆராதனைகள், பூசைகள் இடம்பெற்றன.

(ஒ-15-8)

## கொக்குத்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகப்பெரும் தாக்குதல்களில் இதுவும் ஒன்று என கொழும்பில் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஆண் போராளி ஒருவரும், பெண் போராளி ஒருவரும் வீரமரணம் அடைந்தனர்.

தாக்குதலின் பின் வரும் ஆயுதங்களை தாங்கள் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன:-

- ★ ஏ. கே. எல். எம். ஜி. — 2
- ★ மினி மினி எல். எம். ஜி. — 1
- ★ ஏ. கே. ரைபிள்கள் — 14
- ★ தொலைத் தொடர்பு சாதனம் — 1
- ★ ஏ. கே. மகஸின் — 6
- ★ ரி 81 மகஸின் — 4
- ★ நவீன ரக ரவைகள் — 3,200
- ★ ஜே. ஆர். ரக கிரனெட் குண்டு — 14

(உ-எ-3-126-15)

## தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு, டிச. 25

தொண்டர் ஆசிரியர்களுக்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

கல்விச்சேவைகள் ஆணைக் குழு மேற்கண்டவாறு முடிவு செய்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(இ-த)

## இராணுவ நடவடிக்கை வவுனியாவில் முடிவு

கொழும்பு, டிச. 25

வவுனியாப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவுடன் முடிவுக்கு வந்ததாக கொழும்பில் ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் வவுனியாப் பகுதியில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு நீக்கப்பட்டதா என்பது குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

(உ-எ)

## வங்காலை-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கி காலத்தைக் கழிக்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வங்காலையில் வீடுகளில் இருந்த மிச்ச சொச்ச உடைமைகளும் படையினர் சூறையாடப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

(ஓ)

## வெவ்வேறு-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று வீதைகள் (சல்முகம் - மூஞர்) வீரசேகர [illegible] வர்.

(ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் காசிநாதர்

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் காசிநாதர் ஞாயிறு (22 - 12 - 1991) சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், திரு. வீரசிங்கம் (கணக்காளர்- ஓய்வுநிலைக் கிளை - யாழ். செயலகம்), திருமதி கௌரியம்மா (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி பவானியம்மா (ஆசிரியை), திரு. சோமநாதர் (B. M. C.) ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாயகி, குமாரசாமி (இளைப்பாறிய ஓவசியர்), குழந்தைவேலு (இளைப்பாறிய ஆசிரியர்), தவமணி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 - 12 - 1991 திங்கள் பி. ப. 2-00 மணிக்கு வட்டுக்கச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. தில்லைநாதன்.

அச்சுவேலி. [4456]

## திருமதி பொன்னையா பொன்னம்மா

சாவகச்சேரி வடக்கு, காலஞ்சென்ற சரவணமுத்து பொன்னையாவின் அன்பு மனைவி பொன்னம்மா செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சுந்தரலிங்கம், சரவணமுத்து (இளைப்பாறிய தபாலதிபர், லண்டன்), தியாகராசா (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), தவமணி, இராசாத்தி, பூமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், புனிதவதி, பூலோகமணி, சிவசக்தி (முன்னாள் யாழ். கச்சேரி), சந்திரா (இளைப்பாறிய தபாலதிபர்), பொன்னம்பலம் (முன்னாள் யாழ். மாநகர சபை), திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr. பிறேமராஜ் (விரிவுரையாளர், பேராதனை மருத்துவ பீடம்), பிறேமகிருஷ்ணா (யாழ். மருத்துவ பீடம்), பிறேமசிறீ (பேராதனை பொறியியல் பீடம்), பிறேமசிவன் (சுவிஸ்), பிறேமினி (யாழ். மருத்துவ பீடம்), ரவிச்சந்திரன் (கனடா), ஜெயச்சந்திரன் (லண்டன்), உதயச்சந்திரன் (சுவிஸ்), விமலச்சந்திரன் (லண்டன்), சரச்சந்திரன் (கனடா), ஜனார்த்தனன், விஷ்வப்பிரியா, ஜெகநிவாசன், அனுஷியா (வவுனியா மருத்துவ பீடம்), அனுசாந்தி (கால்நடை மருத்துவ பீடம்), அனுராதா, பிரதீபன் (யாழ். இந்துக் கல்லூரி), நீரஜா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சுரபி, சுஜீவன், கார்த்திகா, ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-12-1991 புதன் கிழமை (இன்று) 12-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பொ. சுந்தரலிங்கம்

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (18975)

## சின்னப்பிள்ளை இலட்சுமி

ஒட்டுசுட்டானைச் சேர்ந்தவரும் கோண்டாவிலை வதிப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியையுமான சின்னப்பிள்ளை இலட்சுமி காலமானார். இவர் சிவக்கொழுந்து, பேரம்பலம் (இராமசேனை உத்தியோகத்தர்), அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாதம், சுவாமிநாதன், கணிமேகலை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-12-91) பிற்பகல் 2 மணியளவில் ஒட்டுசுட்டானில் நடைபெறும். இவ்வறிவித்தலை நண்பர்கள், உறவினர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முக்கிய குறிப்பு: இடைக்காட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுவாமிநாதன் என்பவருக்கு தகவல் கொடுக்க முடிந்தவர்கள் கொடுக்கவும்.

தகவல்:
திருமதி சந்திரசேகரம்

உப தபால் கந்தோர்,
திருநெல்வேலிச் சந்தி. [18976]

## செல்வி கமலாம்பிகை கனகசபை

செல்வி கமலாம்பிகை கனகசபை (24-12-91) நேற்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற திரு. திருமதி கனகசபை J. P. (Crown Proctor) யின் கனிஷ்ட புதல்வியும், அமரர் (செல்வி) பாலாம்பிகை (இளைப்பாறிய அதிபர், கோப்பாய் மகளிர் பாடசாலை), அமரர் (செல்வி) யோகாம்பிகை (இளைப்பாறிய அதிபர், இராமநாதன் கல்லூரி) யின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (25-12-91 காலை 9.00 மணிக்கு) இறுதிக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
கு. பத்மநாதன் (உமாபதி)

"கனகஸ்தான்",
815, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (18978)

# ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச 25

வர்த்தக வாணிப அமைச்சு பு. நோ. கூ. சங்கம் அதன் பாவனையாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இன்று தொடக்கம் பீ. எஸ். சேவிஸ் நிலையத்தில் வைத்து மண்ணெண்ணெயை விநியோகிக்க இருக்கிறது.

நிவாரண அட்டைக்கு ஒரு லீற்றர் வீதம் 38 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் என்று சங்கத்தின் பதில் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 25

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி கோரி விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய காலக்கெடு அடுத்த மாதம் 17ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் நடைபெற்ற ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சை, 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர்தர) விசேட பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான காலக்கெடுவே நீடிக்கப்பட்டிருக்கிறது. (உ-8)

# சவர்க்காரம்: விலை சரிவு

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ். நகரப் பகுதிகளில் நேற்று சவர்க்கார வகைகளின் விலைகளில் திடீரென வீழ்ச்சி காணப்பட்டது.

வீதியோரங்களிலும் கூட சவர்க்கார வகைகள் "மலை" யாக குவிக்கப்பட்டு காட்சியளித்தன.

ஒரு கட்டி சவர்க்காரத்தை 25 ரூபாவுக்கு வேண்டியளவு நேற்று வாங்கக் கூடியதாக இருந்தது. (ஒ-126-15)

# ரூ. 1 கோடி பெறுமதியான தங்கம் பிடிபட்டது

கொழும்பு, டிச. 25

ஒரு கோடி பத்துலட்சம் ரூபா பெறுமதியான 160 தங்க பிஸ்கட்டுகளை நாட்டுக்குள் கடத்த இரண்டு இலங்கையர் எடுத்த முயற்சியை சுங்க அதிகாரிகள் நேற்று முறியடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் இருந்து விமானமூலம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அவர்கள் தங்கள் உடலில் இவற்றை மறைத்து வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# கிழக்கில் வெள்ளம் தணிகிறது

கொழும்பு, டிச. 25

கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் தணிவதாகவும் — 55 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த-எ)

# வவுனியாவில் மோதல்

யாழ்ப்பாணம், டிச. 25

வவுனியா, சமயபுரம் கோவில்மண்ணைக்குச் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளும் எதிர்பாராத விதமாக அவர்களை எதிர்கொண்ட இராணுவத்தினரும் மோதிக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

[illegible] தெரிய வரவில்லை. (ஒ)

# மன்னாரில் முஸ்லிம்கள் குடியேற்றம்

மன்னார் தீவில் தமிழரின் பிரதேசங்களில், முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் கோணார் பண்ணை, எருக்கலம்பிட்டிப் பகுதிகளில் 57 குடும்பங்களைச் சேர்ந்த 335 முஸ்லிம் மக்கள் குடியமர்த்தப்பட்டனர் என்றும்—

இவர்கள் அனைவரும் கப்பல் மூலம் அங்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும் இன்று (25-12-91) புதன் கிழமை காலை 9-30 மணிக்கு எனது அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். (இ/1152)

# இன்ரறக்ட் கழக அறிவிப்பு

சூழல் சுகாதார பாதுகாப்பு வாரம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுவதற்காக சகல பாடசாலைகளின் இன்ரறக்ட் கழக உறுப்பினர்கள் அனைவரையும் நாளை (26-12-1991) காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமுகம் தரும்படி வேண்டுகிறோம்.

செயலாளர்,
றோட்டறிக் கழகம்,
(இ/1151) யாழ்ப்பாணம்.

# A/L 93

**கலை, வர்த்தகம், விஞ்ஞானம்**

புதிய பிரிவுகள்

ஆரம்பம்!

**28-12-91 (சனி)**

## யூனிவேர்சல்

கந்தர்மடம் – யாழ்ப்பாணம்.
(இ/1150)

# மரண அறிவித்தல்

## திரு. முருகேசு கனகசபேசன்

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய கணக்காய்வு பரிசோதகர் திரு. முருகேசு கனகசபேசன் நேற்று (24-12-91இல்) காலமானார். இவர் பேபி சரோஜாவின் (Red Barna) அன்புக் கணவரும், அகிலன் (U. K.), சுதர்சன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நீர்வேலி பண்டிதர் தி. சி. முருகேசு (J. P.) - இராசம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரரும், இளவாலை - பெரியவிளான் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வட பிராந்திய போ. வ. சபையின் பிரதம கணக்காளர் திரு. மனோதனவிநோகம், யாழ். உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் தமாரதாசன், திருமதி கமலாசனி கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஸ்வரி, சரஸ்வதி, திரு. பொன்னுத்துரை கந்தசாமி (இளைப்பாறிய தபால் அதிபர்), நவமணி குணரத்தினம் (U. K.), காலஞ்சென்றவர்களான நடராஜா, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நீர்வேலி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (புதன்கிழமை) நண்பகல் 12மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி தெற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. குமாரதாசன்
[18977] (சகோதரன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-12-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org